செய்தி வெளியீடு எண்: 394 நாள் : 24.07.2013

## செய்தி வெளியீடு

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகள் மிகவும் முக்கியமானது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு கட்டமைப்புகளில், சாலை உட்கட்டமைப்பு மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. தொழில், போக்குவரத்து போன்ற முக்கிய துறைகளின் வேகமான வளர்ச்சிக்கு சாலை கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும், சாலை இணைப்பு வசதி முக்கியமான ஒன்றாக அமைகிறது. ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியை கணிக்க இயலும். சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்குமான பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

மாநிலத்திலுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், அதிக அளவு போக்குவரத்து நெரிசலை எதிர்கொள்ளும் வகையில் சாலைகளை உறுதிப்படுத்துதல், பழுதடைந்த நிலையில் உள்ள சாலைகளை புதுப்பித்தல் அல்லது மீண்டும் நிர்மாணித்தல், சாலைகளுக்கு வடிகால் வசதிகள் ஏற்படுத்துதல், புதிய புறவழிச்சாலைகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு 2,262 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன்படி பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டும் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ், சாலை அகலப்படுத்துதல், சாலைக் கட்டமைப்பின் தரம், மற்றும் திறன் மேம்படுத்துதல், பாலங்கள் அமைத்தல், வடிகால் வசதிகள் ஏற்படுத்துதல், புதிய புறவழிச்சாலைகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக 2,950 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதில் மாநில நெடுஞ்சாலைத்துறையின் மூலம் 55 கி.மீ நீள இடைவழித்தட மாநில நெடுஞ்சாலைகள் இருவழித்தடமாக அகலப்படுத்தும் பணிகள், 1,170 கி.மீ நீள சாலைகளின் கட்டமைப்பின் தரம், திறன் ஆகியவற்றை மேம்படுத்துதல், 30 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் அமைத்தல், நில ஆர்ஜித பணிகள், மற்றும் இதர பணிகள் என 624 பணிகளுக்காக 1,021 கோடியே 26 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய்; மாவட்ட முக்கிய சாலைகள் பிரிவின் கீழ் 912 கி.மீ நீளமுள்ள ஒரு வழித்தட மாவட்ட முக்கிய சாலைகளை இடைவழித் தடமாக அகலப்படுத்தும் பணிகள், 945 கி.மீ நீள மாவட்ட முக்கிய சாலைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள், 20 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் அமைத்தல், நில ஆர்ஜிதப் பணிகள் மற்றும் இதரப் பணிகள் என 854 பணிகளுக்காக 1,178 கோடியே 88 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய்; மாவட்ட இதர சாலைகள் பிரிவின் கீழ் 290 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், 1,061 கி.மீ சாலைகளின் கட்டமைப்பின் தரம், திறன் ஆகியவற்றை மேம்படுத்துதல், 41 பாலங்கள்

மற்றும் சிறு பாலங்கள் அமைத்தல் மற்றும் இதர பணிகள் என 607 பணிகளுக்காக 467 கோடியே 89 லட்சம் ரூபாய்; 50 விழுக்காட்டிற்கு மேல் ஆதிதிராவிடர் மக்கள் வாழும் கிராமங்களில் 167 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தும் பணிகள்; 691 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளின் கட்டமைப்பின் தரம், திறன் ஆகியவற்றை மேம்படுத்துதல், 10 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் அமைக்கும் பணிகள் மற்றும் இதர பணிகள் உள்ளிட்ட 335 பணிகளுக்காக 281 கோடியே 96 லட்சம் ரூபாய் என மொத்தம் 2,950 கோடி ரூபாய் செலவில் 2,420 பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2,950 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட உள்ள 2,420 பணிகளில், சென்னை-திருத்தணி-ரேணிகுண்டா சாலையில் 98 கோடி ரூபாய் செலவில் 22 கி.மீ. நீளமுள்ள சாலையை நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி, 52 கோடி ரூபாய் செலவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் புறவழிச்சாலைகள் அமைக்கும் பொழுது விடுபட்ட சென்னை, திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள நகர்ப்புற பகுதிகளில் 81.53 கி.மீ. நீளமுள்ள சாலைகளை 85 கோடியே 66 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்துதல், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிழக்கு கடற்கரை சாலையை இணைக்கும் மாவட்ட இதர சாலைகளை 11 கோடியே 24 லட்சம் ரூபாயில் மேம்படுத்துதல், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு செல்லும் கனரக வாகனங்களால் பழுதடைந்துள்ள 2.4 கி.மீ மாநில நெடுஞ்சாலைகள், 15.7 கி.மீ மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் 6.4 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளை 50 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணிகள், விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கு செல்லும் 20.14 கி.மீ. சாலைகளை 7 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்துதல், திருப்பூர் மாவட்டத்தில் 2 பல்லடுக்கு மேம்பாலங்கள் மற்றும் நொய்யல் பாலத்திற்கான இணைப்புச் சாலை பணிகளுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள், புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர் நகரத்திற்கு புறவழிச்சாலை அமைப்பதற்கான நில எடுப்பு மற்றும் திட்ட அறிக்கை பணிகளுக்காக 4 கோடி ரூபாய், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படாத சாலைகளை 16 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கும் பணிகள், கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர்-மாதம்பட்டி சாலையில் 3 கோடியே 82 லட்சம் ரூபாய் செலவில் நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலங்கள் கட்டும் பணிகள், சேலம் மாவட்டத்தில் 20 கோடியே 11 லட்சம் ரூபாய் செலவில் சாலை பாதுகாப்பு பணிகளான தாங்கும் சுவர், தடுப்புச் சுவர், மையத் தடுப்பான், பாவுதளம், சாலை சந்திப்பு மேம்பாடு மற்றும் வடிகால் வசதி பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் அடங்கும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் சாலைகள் மேம்பாடு அடைவதுடன், வாகனங்களின் சீரான பயணத்திற்கும், பயண நேரம் குறைவதற்கும் வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 24.7.2013